# நல்லூர் கந்தன் பாமாலை



ரஜனி பிரிண்டர்ஸ் — அன்பளிப்பு

# நல்லூர்க் கந்தனுக்கு எமது சமர்ப்பணம்

ஆழ்கடல் சூழ்ந்த யாழ்ப்பாணக் குடா நாட்டில் இயற்கைவளங் கொழிக்கும் சூழல்களைத் தன்னுள்ளடக்கியுள்ள தெய்வ மணங்கமழும் திருப்பதியாம் நல்லூர் என்பது உலகறியும்,

தமிழுக்கு வடிவளித்து, உயிரளித்து, சங்கத்தினல் வளர்த்து, தமிழ்ப் பெருமையை வையகமெல்லாம் வீரத் தமிழர் பண்பாடாக உயர்த்திக் காத்து நிற்கும் தமிழ்த் தெய்வம் வடிவேலனின் உறைவிடமாக இருப்பதுதான் நல்லூர்க் கந்த சுவாமிக் கோயில்.

மனங்கவர்ந்த வள்ளி, தெய்வயானை சமேதராக எழுந்தருளி வையமெல்லாம் தனது வீரவேல் பெருமையாலும்

மகிமையாலும் தமிழினத்தைக் குன்றாப் புகழுடனும் பெருமையுடனும் வெற்றியுடனும் வாழவைக்கும் நல்லூர்ப் பெருமான், நமது குருநாதன், கந்தசுவாமியின் கரங்களில் தமிழினமும், தமிழ் மொழியும், சகல மனித சமுதாயமும் சாந்தியும் சமாதானமும் வெற்றியும் மகிழ்வும் கொண்டு இனிது வாழ்ந்திட எமது பிராத்தனைகளை நல்லூர்க் கந்தனுக்கு இச்சிறு பாமாலை வாயிலாக சமர்ப்பணம் செய்வதில் இறையருள் பாலித்திருப்பதை எண்ணி வியக்கின்றோம்.

எமது இச்சிறு பாத காணிக்கையாக வெளியிடும் நல்லூர்க் கந்தசுவாமி பிராத்தனை மாலை இலவச வெளியீடாக பக்த கோடிகளுக்கு கிடைப்பதுடன் நல்லூர்க்கந்தனின் அபயமும் ஆதரவும், துணையும் நிலவிட நல்லூர்க் கந்தனின் பாதகமலங்களில் எமது சிரம் கவிழ்ந்து வணங்கி வாழ்த்துகிறோம்.

---

ரஜனி பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. சண்முகம் ஈஸ்வரமூர்த்தி ராஜேந்திரன், திருமதி. நந்தாதேவி ராஜேந்திரன் மற்றும் அன்புக் குழந்தைகளும் அச்சக உத்தியோகத்தர்களும். தொழில் இயக்குநர்களும்.

# ஓம் ஸ்ரீ கணபதி துணை

(1) அம்புவிக்கோர் ஆதி எனும் நாயகனே ஐங்கரனே
நம்பும் அடியார் தமக்கே நற்றுணை செய் வேழமுகா
ஓம் என்னும் பிரவணத்துள் உருக்கொண்ட முதலோனே
நாம் நினது பதமலர்கள் சென்னிவைத்து நாடுவமே

(2) நல்லூரான் நின் தம்பி வடிவேலன் சந்நிதியில்
வெல்லும் படித் தமிழில் யாம் வழங்கும் வாழ்த்துப்பா
வல்லதாய் வேண்டும் நலம் வளங்கொழிக்கமனங்கனிந்து
நல்லருள் பாலிப்பாய் பிரணவனே நாயகனே.

(3) ஆனைமுகத் திருப்பொலிவே அம்மையப்பர் முறற் கருவே
தீன தயாபரனே தீதகற்றும் கணநாதா
ஞானத் தவக் கொழுந்தே நல்லூரான் மீதுரைக்கும்
தேனூறுந் தமிழ்ப்பாக்கள் திறம்வியக்கச் செய்குவையே.

# நல்லூர்க் கந்தசுவாமி பதிகம்

(4) செந்தமிழின் தெய்வமே வந்தகுறை தீர்த்திடும்
தென் தமிழர் வணங்கும் கோனே,
சுந்தர சொரூபனே சிந்தையில் குடி கொள்ளும்
விந்தை மிகு ஈசன் மகனே,
சந்ததம் நினைப்பாடி வந்திடும் பக்தர்கள்
சஞ்சலம் நீக்கும் குகனே,
எந்தத் திசையிலும் எங்கெங்கு நோக்கிலும்
இருப்பவன் நீ குருநாதனே,
வந்த வினை நீங்கிட வாழ்வளித் தாண்டிட
வல்லவனே வடி வேலனே,
முந்தை யோர் நின்னடி முழுமனதும் வைத்ததால்
முகம் மலர்ந்த தமிழ் முருகனே,
சிந்தா குலம் தீர்த்துச் சுகம் மேவிப் புகழ் ஓங்கத்
திருவருள் தா ஈசன் மகனே,
இந்த நாள் சுதந்திரம் விடிந்த தென வேல் ஏந்தி
எழுவாய் சண்முக நாதனே,
நிந்தை மொழி பேசுவோர் வந்து தலை பணிந்துன து
நீதிவழி ஏற்க அருள்வை,
கத்தனே கடம்பனே கலாபமயில் ஏறிடும்
கடவுளே நல்லூரானே.

(5) நல்லூர்ப் பதிதனில் மயிலேறி விளையாடும்
நாதனே கதிர் வேலவா,
வல்லமை மிகு தமிழின் தெய்வமே அழகுமிளிர்
வாழ்வெலாம் கலந்த அமுதா
சொல்லெலாம் நீயல்லால் வேறு ஒரு பொருளே
தேவர்கள் போற்றும் திருவே
அல்லல்கள் நீங்கிட அருள்புரிந் தெமை ஆளு
ஐயனே ஆறுமுகனே
எல்லாமாய் யாவுமாய் எங்கெங்கும் நிறைந்திடும்
எழில் மேவும் கந்தவேளே
செல்வனே தமிழுக்கு இனியனே திறன்கூறும்
சேவல் கொடி ஏந்தும் கந்தா
வல்லார்க்கு வல்லவா வடிவேலின் நாயகா
வள்ளி தெய்வானை சீலா
கல்லார்க்கும் கற்றோர்க்கும் கருணை புரிந்தாளுமை
கதிர் காமப் பதி கொண்டவா
இல்லார்க்குக் கதி நீதான் எம்மருமைத் தெய்வமே
ஏறுமயில் ஏறி வாராய்
பொல்லாங்கும் நீங்கிடப் புகழ்மேவி வாழ்ந்திடப்
பெருமை செய் நல்லூரானே.

(6) நீயலால் யார் உண்டு எமைக் காக்க இதுவேளை
நிலையான கந்த வேலா
தாயும் நீ தந்தை நீ தமிழினத் தெய்வம் நீ
தன்னிகரிலாத தேவே
ஆயும் பொருளெல்லாம் நீகலந்து மலர்வதும்
அறிந்தவர்க் கினிதாம் முருகா
வாயெல்லாம் நின் பெருமை பேசிடும் மனமெல்லாம்
வடிவோங்கி எழுந்த திருவே
தியவை நீங்கவும் திருவொளி ஓங்கவும்
திரு தமிழர் இனம் வாழவும்
மாயாத பலமருள் கந்தனே கடம்பனே
மனதிரங்கிக் காத்து மகிழ்வை
சேயெமது துன்பங்கள் நீங்கவும் ஜெயம் கொண்ட
திருவாழ்வு புலர்ந்து எழவும்
தாயகம் தலைநிமிர்ந்து தன்னிலை சிறந்திடும்
தகுதியைத் தந்தருளுவை
தூயனே, வடிவேலா முருகனே தமிழ்காக்கும்
துணைவனே மயில் வாகனு
காயாத கருணைக் கண் கனிந்தருள் தெய்வமே
களனி சூழ் நல்லூரானே.

(7) எங்கெங்கு நோக்கினும் அங்கே நீ வேலேந்தி
ஆபத்துக் குதவ வருவாய்
செங்கதிர் ஒளிமேவும் தங்கவேல் முருகனே
திருவோங்கும் குமரேசனே
மங்கள மணியோசை முருகா முருகா என
முழங்கிடும் நாத வெள்ளம்
தங்க மயிலேறியே வள்ளி தெய்வானையுடன்
தரிசனம் தந்தருளுவை
சங்கத் தமிழ் மறை போற்றிடும் சண்முகா
சரவணனைந்த பவனே
சங்கடமெல்லாந் தீர்த்து நீ செய்த தமிழ்வாழ
சாதிப்பாய் நீதி வெல்லும்
திங்கள் சிரமணிந்தோனின் குருவான
தீனர்தயாள கந்தா
இங்குனது காட்சியால் எங்குஞ் சுந்திரம்
எழில் ஓங்கும் துயர் நீங்குமே
சிங்கார வேலனே திருப்பழனி யாண்டவா
திருச் செந்தூர் வலம் வந்தவா
எங்கள் குல நாதனே எழில்மேவும் கந்தனே
எமையாளும் நல்லூரானே.

(8) தண்டாயுத பாணி எனும் நாமம் பூண்டவா
    தமிழ்த் தெய்வம் ஆன முருகா
கொண்டாடும் பக்தரின் குறையாவும் தீர்த்திடும்
    குமரேசத் தெய்வ மணியே
பண்டாரக் கோலத்தில் மலை ஏறி இளங்காத்த
    பாலனே வடி வேலனே
அண்ட பகிரண்டமும் சரவணபவனென
    அருள் நாமம் கொண்ட குருவே
அண்டினோர்க் கபய மருள் ஆநந்த வேலனே
    ஆறுமா முகக் கடவுளே
செண்டா வுயர்த்தியே வேலேந்தி மயிலேறி
    சேவல் வெற்றிக் குரல் ஒலிக்கவே
சண்டாளக் கொடுமைகளைத் தவிடுபொடியாக்கிடத்
    தருண மிது வருக முருகா
மண்டலமெல்லாம் காக்கும் மாணிக்கவேலவா
    மனதிரங்கி காட்சி தரும் உன்
தண்டாமரைக் கழல்கள் தலைவணங்கி ஏற்றியே
    தனயன் யான் உனைப் பாடினேன்
உண்டென்பேன் அருள் துணைஉளதென்பேன் உனை நம்பி
    உலகாள்வேன் நல்லூரானே

# வேண வரமருள் வடிவேலா

கானப் பெண்மான் மகள் வேடர் வளர்த்தவள்
தேனுந் திணை யருந் திருந்தோனே
தீனர் தயாபர வானோர் மகிழ்வுற
ஞான வேற்படை கொண்ட அதிதீரா
மான மிகு தமிழான இனத்தவர்
மாண்புக் கணி செயும் முருகோனே
ஈனர் அசுரர்தம் சேனை யழித்திட்ட
கானக் குறமகள் மணவாளா
ஞானக் கனிக்கென மோனம் கலந்த நீ
ஞானபண்டிதனென உயர்ந்தாயே
தானய்த் தனித்தவ மாணய் யுனக்கு நீ
தானே தலைவனென் றுறைந்தாயே
கோனே தமிழினக் கோவே மயிலேறும்
குருவே சேவற்கொடி படைவேந்தா
யானே உனத்தினம் பாடித் துதிக்கிறேன்
வேணவர மருள் வடிவேலா.

"சக்தி" பாலஜ - ஐயா.

உங்களுக்குத் தேவையான

O திருமண அழைப்பிதழ்

O கலண்டர்

O டயறிகள்

O வாழ்த்து மடல்கள்

மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும்
சிறந்த திருப்திகரமான சேவைகளை
வழங்குவது

★

ரஜனி பிரிண்டர்ஸ்

EG/2, மத்திய வீதி,
கொழும்பு - 12.

தொலைபேசி : 545880

இலவச வெளியீடு எண் — 5